// பொதுத் தேர்வு // //தனிகவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 300 / ஆ 4 / 2021 நாள் 25– 01–2021

பொருள்: தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – – 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியல் தயாரித்தல் – பள்ளி மாணாக்கர் விவரங்களை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் – சார்பு

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.58, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (D.M– IV)துறை, நாள்.22.01.2021.
2. சென்னை அரசு தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 025650 / எச்.1 / 2020 நாள் 25–01–2021

-----

பார்வையில் காணும் அரசாணை மற்றும் பார்வை 2ல் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கநர் அவர்களின் கடித்திற்கிணங்க 2020–2021ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்விற்கு பெயர்ப்பட்டியல் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, கடந்த மார்ச் 2020–ல் நடைபெற்ற மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலினை (Nominal Roll) அடிப்படையாகக் கொண்டு, 2020–2021 ஆம் கல்வியாண்டின் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது.

எனவே, இது குறித்தான பின்வரும் அறிவுரைகளை அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் சிறப்பு கவனம் செலுத்தி செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் 27.01.2021 பிற்பகல் முதல் 01.02.2021 வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி 2020–2021– ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள தங்களது பள்ளி மாணாக்கரின் நிரந்தரப் பதிவெண், பெயர், பிறந்ததேதி, பாடத்தொகுதி உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

2. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர் விவரம் அடங்கிய பட்டியலில், தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணாக்கரது பெயர் (தமிழ்மற்றும் ஆங்கிலத்தில்–Initial and Spelling Mistake only), புகைப்படம் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின், அதன் விவரங்களை பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகலுடன் இணைத்து **02.02.2021 தேதிக்குள் வேலூர் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.** பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அடிப்படையில் மட்டுமே பெயர் மற்றும் பிறந்த தேதி திருத்தம் மேற்கொள்ளப்படும்.

3. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்து பெயர் மாற்றம் செய்த மாணாக்கர்களுக்கு மட்டும், பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படும். அவ்வகை மாணாக்கரது பெயர் திருத்தம் கோர அரசிதழின் நகலை கண்டிப்பாக முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

4. ஒரு பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று, மார்ச் 2020–ல் மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதிய பின்னர், மாற்றுச் சான்றிதழ் பெற்று வேறொரு பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பில் (+2) சேர்ந்து பயிலும் மாணவரது பெயரை, அன்னார் தற்போது +2 பயிலும் பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியலில் சேர்த்திடலாம். ஆனால், அம்மாணவர் ஏற்கனவே +1 பயின்று தேர்வெழுதிய பாடத் தொகுப்பு, பயிற்று மொழி மற்றும் மொழிப்பாடம் ஆகியவற்றில் எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது.

5. மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வுக்கு பின் வேறு பள்ளியில் சேர்ந்து +2 பயிலும் மாணாக்கரின் பெயரை, தற்போது +2 பயிலும் பள்ளியின் பெயர் பட்டியலில் சேர்க்க வேண்டுமெனில், +1 மதிப்பெண் பட்டியல் நகல், மாற்றுச் சான்றிதழ் நகல் உள்ளிட்ட ஆவணங்களை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அம்மாணாக்கரின் பெயர் முதன்மைக் கல்வி அலுவலகம் மூலம் மேல்நிலை இரண்டாமாண்டு (+2) தற்சமயம் அம்மாணவர் படிக்கும் பள்ளியின் பெயர் பட்டியலில் சேர்க்க வேண்டும். பெயர்ப் பட்டியலில் திருத்தங்கள் மற்றும் சேர்க்கை (Addition) போன்றவற்றினை எவ்வாறு

மேற்கொள்வது தொடர்பான விவரங்களை www.dge.tn.gov.in வீடியோ பதிவின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

6. மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று +1 தேர்வெழுதிய பள்ளி மாணவருக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே பெயர்ப்பட்டியலில் இருந்து அம்மாணவரின் பெயர் நீக்கம் (Deletion) செய்திடலாம்.

7. 2017–2018 / 2018–2019 கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பயின்று தேர்ச்சி பெற்று / பெறாமல் இடைநின்று தற்போது மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்று வரும் மாணாக்கர் பெயர், பிறந்த தேதி, நிரந்தரப் பதிவெண், பாடத்தொகுப்பு மற்றும் பயிற்று மொழிகள், அடங்கிய விவரத்தினை **02.02.2021 தேதிக்குள் வேலூர் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்** என அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்விஅலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதலவர்கள்

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது
2. வேலூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.